கவிமுளரி

மாதாந்த மின்னிதழ்

கவிதைகளின் வாசம்

கால்கோள் : 2023



முளரி 2 இதழ் 4

25 ஏப்ரல் 2024

விபுலானந்தர் கலை இலக்கிய மன்றம் பேத்தாழை

விபுலானந்தர் கலை இலக்கிய மன்றம்

கவிமுளரி®

மாதாந்த மின்னிதழ்

கவிதைகளின் வாசம்

கார்த்திகை : 2023

ISSN 3021-6680

Kavi Mulari Magazine

புதிய ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன.

படைப்புகளை அனுப்புவோர் கவனிக்க வேண்டியவை :

- கவிதைகள் மட்டுமே அனுப்பலாம்.
- ஒருங்குறியில் (Unicode font) தட்டச்சு செய்து அனுப்ப வேண்டும்.
- படைப்பாளர், படைப்பின் கீழ் தமிழில் பெயரையும் வசிப்பிடத்தையும் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும்.
- ஆக்கம் தனது சொந்தப் படைப்பு என்பதை உறுதிசெய்தல் அவசியம்.
- ஒவ்வொரு மாதமும் 15 ஆம் தேதிக்குள் ஆக்கங்கள் அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.
- ஒருவர் எத்தனை ஆக்கங்களும் அனுப்பலாம்.
- ஆக்கங்கள் அடுத்தடுத்த இதழ்களில் பிரசுரிக்கப்படும்.
- மின்னஞ்சலுக்கு அனுப்பப்படும் ஆக்கங்களே இதழுக்கு ஏற்கப்படும்.

. . . .

ஆக்கங்களை அனுப்ப

editor2023kavimulari@gmail.com

வாசிப்பு அனுபவத்திற்கு நுழையுங்கள்...

https://www.facebook.com/profile.php?id=61552005633300
https://facebook.com/groups/818237263429433/
https://kavimulari.blogspot.com

"எழுதுகோல் புரட்சி
எங்ஙனும் எழும்பட்டும்
விழுதென விடுதலை
சமூகத்தில் நிலைக்கட்டும்"

படங்களுக்காய் நன்றி நவில்கிறோம் : Google, முகநூல் மற்றும் பெயர் குறிப்பிடாத ஓவியர்கள்.

நற்கவிகளுக்கு
வணக்கம்,


வாழைச்சேனை பேத்தாழையைத் தளமாகக் கொண்டு இயங்கும் விபுலானந்தர் கலை இலக்கிய மன்றத்தின் முயற்சியாகக் ‘கவிமுளரி’ எனும் கவிதைசார் மின்னிதழ் வெளிவருகிறது.

பிரதேச கவிஞர்களுக்குக் களம் கொடுப்பதும் அவர்களின் எழுத்தாக்க முயற்சிகளுக்குக் கரம் கொடுப்பதும் எமது பிரதான அவா.

தொடர்ந்து,
6 இதழ்கள் வெளிவந்தன. அதற்கு நீங்கள் வழங்கிய ஆதரவிற்கு மேலான நன்றி. தொடர்ந்தும் ஆதரவளிப் -பீர்கள் என நம்புகின்றோம்.

இதழில் பங்குபெறும்
கவிஞர்கள் யாவர்க்கும்
வாழ்த்துகள்.

சிலரது கவிதைகள் இடம்பெறாமல் போயிருக்கலாம். அவர்களது கவிதைகள் தொடர்ந்து வரும் இதழ்களில் நிச்சயம் வெளிவரும்.



தொடர்ந்தும் உங்கள்
பேராதரவை வேண்டும்,

உங்கள்,
-இதழாசிரியர்

2024.04.25

முளரியில் வாசம் வீசும் தாதுக்கள்

தமிழ்ப்புதல்வன் க.த.யேசுசகாயம்

அழகையா சிவநாதன்

மன்னைத் தமிழ்த்தோன்றல்

வி.அபிவர்ணா

இரா.நிதன்

அலெக்ஸ் பரந்தாமன்

ரவிகிருஷ்ணா

க.சிவதர்சன்

ஜூ இர்ஷாத்

கௌ.நந்தினி

வளர்கவி வாழையூர் அபி

பிள்ளைக்கவி பிரசாந்


தமிழேரால் அனுஷ்திக்கா

ஓ.சா

கவித்தோழி சிவநந்தினி

பொ. சாய் டிலக்ஷி

தமிழ்மகள் சதுர்த்தி



-தமிழ்த்தாய் வாழ்த்து-

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகுஞ்
சீராரும் வதனமெனத் திகழ்பரத கண்டமிதில்
தக்கசிறு பிறைநுதலுந் தரித்தநறுந் திலகமுமே
தெக்கணமு மதிற்சிறந்த திராவிடநற் றிருநாடும்
அத்திலக வாசனைபோ லனைத்துலகு மின்பமுற
எத்திசையும் புகழ்மணக்க விருந்தபெருந் தமிழணங்கே, (௧)

பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள்முன் னிருந்தபடி யிருப்பதுபோல்
கன்னடமுங் களிதெலுங்குங் கவின்மலையாளமுந்துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே யொன்றுபல வாயிடினும்
ஆரியம்போ லுலகவழக் கழிந்தொழிந்துசிதையாவுன்
சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே. (௨)

~மனோன்மணியம் சுந்தரம்பிள்ளை.

தமிழ்த்தாய்

அறுசீர் விருத்தம்
(மா–மா–காய்)

-தமிழ்ப்புதல்வன் கத.யேசுசகாயம்
கிரான்.



வையம் பேசும் மொழிகளிலே
வளமை நிறைந்த வண்டமிழே
பைய நாவை அசைத்தாலே
பாங்காய் வருவாய்ப் பைந்தமிழே
மையல் கொண்டு கற்றாலே
மங்காப் புகழைத் தந்திடுவாய்
தையல் உன்னைப் போன்றதொரு
தாயைத் தரணி கண்டதில்லை.

மண்ணில் வாழும் மாந்தரெல்லாம்
மகிழ்ச்சிக் கடலில் திளைத்திடவே
கண்ணிற் காணும் காட்சியாவும்
களிப்பு மிகுதி கொடுத்திடவே
பண்ணில் வைத்துப் பாவலரும்
பாக்கள் பலவும் இயற்றிடவே
வண்ணக் கோலம் காண்பதற்கு
வசந்தம் நீயும் வருவாயே.

மலையக அன்னை

-அழகையா சிவநாதன்
கோட்டைக்கல்லாறு-02.

அலை அடித்து ஓய்ந்தாற் போல்
ஆழ்ந்த உறக்கம் இது, ஓய்வின்றிப்
பணிகள் புரிந்ததாலோ – இல்லை
என் மகளைக் காணும் வேட்கையின் வெளிப்பாடுதானோ

மூன்று வயதே நிரம்பியிருக்கும் என்
புன்னகை பூத்த மரத்துக்கு
அடுக்களைக் கற்கள் மூன்றும்
கறையானுக்கிரையாகி மூன்று மாதங்கள்தான்

கருநிற மேனி கொண்டவள்தான் என் பூமரம்
அவள் புன்னகைக்கையிலே அக்கணமே
பசி மாறிப் பத்தும் மாறி எங்கள் சிந்தையெல்லாம்
அவள் கன்னம் தோண்டும் கிணற்றடியில் லயித்திருக்கும்

செங்கறுப்பியவள் பசி கொண்டழுகையிலே முலை கொடுத்தேன்
வரண்ட பூமியிலே பாலென்ன சுரக்கவா போகிறது
செல்லப்பா கடையினிலே கடனும் கனத்திடுச்சி
இனிப்போனா அவர் நற்புகழ்ச்சி எனக்கு வேணாமப்பா

என் மனிசன் அழகான வெள்ளையன் தான்
அவர் பேரும் அப்படித்தான், நானிங்க
பக்கத்தில கொழுந்து பிடுங்கி வந்த கூலியில – பாவியவன்
அரைவாசிய அடிச்சிப் புடுங்கிச் சீட்டாட்டத்தில தொலைச்சிடுவான்

வாயில நெருப்புக்குச்சி புகைய பின்னேரமவன் வருகையில
மிச்சம் மீதி காசியில பனையான் குழம்பும் காரமாய் வச்சிடனும்
இல்லையன்டா எனப்போட்டு நலமாகக் கூம்பிடுவான்
பாவியவன் கையில பாவி நானும் பாவையப்பா

இப்படியொரு வாழ்க்கையென்டு என்னாத நாளுமில்ல
கண் கலங்கி வயிறெரியக் கண்ணீர் சொட்டாத வீடுமில்ல
அப்போதான் செல்லக்க பாரேன்டி கேளேன்டி – நம்ம
தேவி, வெளிநாடு சென்று சீமாட்டி போல வந்திருக்காம் என்றாளப்பா

காரிருள் சூழ்ந்த வேளை அது
காற்றிடைக் கலைந்து தோன்றும் மதி போல
என் செங்கறுப்பி வதனமது தோன்றி மறைந்திடவே
அவள் குறித்த கனவுடனே கப்பலுமேற முனைந்திட்டன்

என் பெரியக்கா செல்லக்காள் வீட்டிலதான்
என் பூமரமும் மரங்களோட மரமாக வளருதப்பா
போன வாரம் செல்லக்காள் அழைத்திருந்தாள்
என் பூமரம் பூத்திடுச்சாம் என்று கத்திட்டாள்

மூவாயிரம் ரூபாய் பட்டுத்துணி உடுத்தா
எப்படியிருக்குமப்பா அப்படித்தான் இருந்துச்சு
என் செங்கறுப்பி ஆளாகிட்டா எனக் கேட்க – அவள்
பிஞ்சு முகம் வந்து வந்து போகுதப்பா

என் பூமரம் பூத்துக் குலுங்குகிற அழக
நானும் கண்ணாரக் கண்டு மகிழப்போறன்
கப்பலில இருந்து நானிறங்கி என் வீடு மட்டும்
நலமாகச் சேர்ந்திடனும்

நெஞ்செல்லாம் ஒரு மாதிக் கனக்குதப்பா...



தமிழா! துள்ளி மேவு நாடெலாம்

-மன்னைத் தமிழ்த்தோன்றல்
தமிழ்நாடு.

பாவகை :
வஞ்சி விருத்தம்

அன்பு நாடு, ஆளவே
துன்பு ஓடும் நாளெலாம்!
என்பு தேய வாழ்வெலாம்
இன்பு தேடி தாழ்வதோ!

நட்பு மேவ நாடுவாய்
பொட்பு நேரும் பாடவே!
தட்பம் கூட நாட்டிலே
வெட்பம் சூடு பாட்டிலே!

வன்மம் சேர வீழ்வதோ
சென்மப் பாவம் மீள்வதோ!
கன்மம் சூழ நோற்பதோ
தன்மச் சேயும் தோற்பதோ!

சங்க காலம் தேடியே
திங்கள் தோறும் கூடுவாய்!
எங்கும் பாடி ஆடவே
அங்கன் பாதம் நாடுவாய்!

எண்ணம் வாழ மேன்மையே
திண்ணம் கூடக் கேண்மையே!
மண்ணுள் கேடு நீங்கவே
பண்ணும் பாடல் ஓங்குமே!

கொஞ்ச மாது நாடுவோர்
மிஞ்சும் தீது கூடுமே!
விஞ்ச வாது வேண்டுதீ
தஞ்சம் நாடு ஆண்டவா!

இன்மை ஞாலம் வீழவே
நன்மைப் பேணி வாழுவோம்!
புன்மை மாதர் தூற்றவே
வன்மைத் தேடச் சாற்றுவோம்!

பந்தம் தேடு மீளவே
எந்தை நாடு ஆளவே!
சிந்தை யாளும் பாட்டிலே
விந்தை ஆலம் நாட்டுவாய்!

கற்று தீயும் ஆயவே
பெற்ற ஞானம் தீயதோ!
வெற்றி காணப் பாரிலே
பற்று தேடு வீரியாய்!

அந்தம் ஆதி தீவியே
சொந்த நாடு மேவியே!
பந்தம் கூடத் தேசமே
கந்தன் தீரம் பேசுமே!

காடு மாயும் தேயமே
நாடும் பாவி ஞாயமோ!
கூடு தீயும் கேட்கவே
ஆடு பொச்சை மீட்கவே!

தேவக் கோவம் தீர்க்குமே
பாவக் கூடம் ஆர்க்குமே!
காவல் தேடத் தீருமே
சீவன் மாய நேருமே!

பொய்யும் மேவும் பாவியே
மெய்யும் சாட்டும் சாவியோ!
தொய்யும் வேளர் ஆவியே
உய்யும் நாளை மேவியே!

மாற்றம் தேடு தோன்றலே
ஆற்றல் கூடும் சான்றிதே!
தோற்றம் காண ஏங்கு-
வோர்
சாற்றும் வேளைத் தூ
ங்கவோ!

கள்ள மாயர் ஓடவே
எள்ளி யாடக் கூடுமோ!
உள்ள வேட்கை கூடவே
துள்ளி மேவு நாடெலாம்!



தன்மானம் இழந்த மனிதம்

-வி.அபிவர்ணா
முல்லைத்தீவு



ஒழுக்கத்தை
ஏந்தி அலையும்
ஒரு மங்கல உறுப்பு
இல்லாத இவனை
ஊனம் என விளிப்பதில்
தவறில்லைதான்
நகரம்
நால்வழிச் சாலையில்
கொடு நாற்றமெழ
மலங்கழிப்பதை
உணருமிவன் நாசி
நாய்களின் முகத்திலமர்ந்து கொண்டு
தெருத்தெருவாய் ஓடுகிறது.

மதுபானக் கடையிலிருந்து
கழுத்து சுளுக்கித் திரும்பிய
திடீர் போதகர்கள்
மூடி எறிந்த
வெற்றுக் குப்பிகள்
நீர்நிலையின்
அலை விளிம்பினில்
ஆடும் நடனத்தில்
மோதிய மீன்கொத்தியின்
உடைந்த அலகில்
இவனுமிருந்தான்.

மலைப்பாம்பின் உடலுக்குள்
புகுந்துகொண்ட
திறந்தவெளிச் சந்தைகள்
குளிரேறும் அறைகளுக்குள்
சுருண்டிருப்பது கண்டு
மல்லித் தழைபோல்
மறுகி மலைக்கின்றது
இந்த
கேவலமான கற்கால
நெஞ்சம்.

விளைச்சலுக்குப் போனவனும்
வேட்டைக்குப் போனவனும்
ஏறிய பேருந்தில்
ஒருவன் காலை
ஒருவன் மிதிக்க
கட்டிப்புரண்டு சண்டை.
கிழிந்த சட்டைப்பையிலிருந்து
சிதறிய நாணயங்களையெடுத்து
தனக்குத் தெரிந்த ஊருக்கு
சீட்டு கிழிக்கிறார் நடத்துனர்.

பூமி சமாதானமாய்ச் சுழல்கிறது
தனக்குத் தானே சட்டையைக்
கிழித்தபடி
பேருந்திலிருந்து
தன்னை உதைத்து
வெளியே விழுகிறான்
இந்த பைத்தியகாரன்.

காவியப்பெண்

-இரா.நிதன்
மட்டக்களப்பு



நீண்ட கூந்தல்
முடிகளும்
இவனின்
மார்போடு
தொட்டுப் பேசி
மனதின்
காயங்களை
ஆற்றிப் போகும்
கற்பனைக்கும்
எட்டாத
கவிகளின்
புதிய காவியம்
தானவள்
மாற்றமும்
அவள் சூடிக்
கொள்ளுகின்ற
மல்லிகை போன்று
அழகாகத் தான்
எப்போதுமே
தோன்றும்...

ஒரு கேள்வி...?

- அலெக்ஸ் பரந்தாமன்
புதுக்குடியிருப்பு.

மனம் சலித்து நடக்கிறானவன்
ஒரு
கவிதை எழுத முனைந்த தோல்வியில்.

நண்பன் கேட்டதற்கிணங்க
நாலுநாள்வரை
மன அலைச்சலின் பின்பும்
உருக்கொள்ளுதில்லைக் கவிக்கு
உருப்படியானதொரு கரு.



எழுதி... எழுதி...
எழுத முடியவில்லை இன்னமும்
அவனால்.

சிதிலமாகும் வார்த்தைகளால்
கிழிபடுகின்றன வெண்தாள்கள்
அதிகமான கற்பனையில்
அல்லாடுகிறது அவன்மனசு.

நிறைவான வாழ்வின் உள்ளிருந்து
குறைவற்ற பசியறியா உணர்வுகளில்
எப்படி எழும் அவனுக்கு
கவிக்கான கருப்பொருள்கள்?

ஐந்நிலம் பேசும்

-ரவிகிருஷ்ணா
மட்.கிரான்குளம்.



குறிஞ்சியதன் குரலாகி
குன்றுதனில் மேவிநின்று
ஆற்றிடை ஓடம் காணும்
அழகினிலே மனமும் போகும்

முல்லையின் ரூபமாகி
முடிந்ததுமே கதைகள் பேசும்
காடெனும் சோலையுள்ளே
கருவிகள் பலவும் பேசும்

மருதமாம் வயலினோசை
மக்களோ பசுமை தாங்கி
கலையிலே சிறந்து வாழும்
கற்பனை எண்ணுவோமோ

நெய்தலின் இடையதாகி
நெய்யரி செய்து வைக்கும்
வலைதன் வீச்சு தன்னில்
வரிசையாய் மீன்கள் தங்கும்

பாலையும் சோலையென்று
பரிவிடை தானும் செய்யும்
பழுதில் தைரியங்கள்
பலவுமே கொண்டு செல்லும்

எனக்குள் நீ

க.சிவதர்சன்
கிண்ணையடி.



மனமுடைந்து புலம்புகிறேன்
சித்தனாக அல்ல
ஒரு பித்தனாக...

சூரியன் தன் பணி முடித்து
தன் இல்லகம் நுழையும் தருணம்...
இதமான பொழுது
கனிவான பேச்சு
அன்பான உறவுகளுடன்
ஆனந்தமாய் இருக்கையில்...

ஒரு அழைப்பு
என்னை நோக்கி
ஆனந்தம் கலைய
மெய் மறந்து
உடல் நடுங்கி
உளம் கலங்கி
உயிரோடு ஒரு பிணம்
ஊசலாடியது போல்
ஒரு உருவமாய்...

காரணம்!
கருவறையைப் பகிர்ந்து
பின்
காலமெல்லாம்
நான் இருப்பேன் என
நம்பிக்கை ஊட்டிய
உறவின் சுவாசம்
நின்றதை எண்ணி...

கண்களை மூடினால்
உன் விம்பம்
திறந்தால் உன்
நினைவுகள்...
காத்திருக்கின்றன
என் விழிகள்
உனக்காக மட்டும்...

ஆயிரம் உறவுகள்
சூழ்ந்தது
அனைவரது அன்பும்
என்மேல் வீழ்ந்தது
அத்தனைக்கும் மத்தியிலும்
அநாதையாய்...

தாயின் அரவணைப்பு
தந்தையின் அன்பு
அத்தனையும் பகிர்ந்தோம்
நாமாக நமக்குள்ளே.....

உறவுகளின் இடைவெளிகள்
நிரப்ப – பல
உறவுகளின் வடிவமானோம்
சந்தர்ப்பத்திற்கு ஏற்றாற்போல்...

தடுமாறும் போது
தலை நிமிரச் செய்யும்
தாராள பாசத்தை
அளவின்றி பகிர்ந்தோம்
அன்பாய் வாழ்ந்தோம்....

உறவிற்கு இலக்கணமாய்
இதிகாசத்தைத் தாண்டிய
எடுத்துக்காட்டாய்
நிலை பெற்றது எம் சகோதரத்துவம்...



... கஸல் நிழல்...

-ரூ இர்ஷாத்
வாழைச்சேனை.

புற்காடுகளுக்குள்
உன்னைத்தேடி
பயணப்படலாம்
பின்னிரவுகளுக்குள்
என்கதை என்ன?

உன் நிழலில்
கூடுகட்டும் பறவை
நிலைத்திருப்பதில்லை.

உன்னை
எழுத நினைக்கிறேன்
விட்டுவிடுகிறேன்
மீண்டும் தேடி அலைகிறேன் .

நீயும் மரணமும்
இல்லையென்றால்
வாழ்வு
அர்த்தமற்றுப் போயிருக்கும்
வாழ்ந்து மரணிக்கிறேன்
உன்னால்.

என்ன இருக்கிறது
உன்னிடம்
பேசுவதற்கு ?
மௌனம் தவிர்த்து.

நான்
பழைய பாதைகளில்
பயணிக்கிறேன்
இப்போதெல்லாம் பழைமையில்தான்
உன்னைக் காண முடிகிறது.



ஒளியைப் போதிக்கும்
மின்மினி போல்
உன்னைப்
போதிக்கிறேன் .

அழாதே
என்மரணம்
உன்னை
விடுதலையாக்கும்.

நினைவுகள்

-கௌ.நந்தினி
பாசிக்குடா.

நினைவுகள் அந்நாட்களின் நிழல்கள்
ஓலைக்குடிசையினுள் மண்ணில் புரண்ட நினைவுகள்...
ஊரே சேரும் நன்னாட்களில்
உறவுகள் எங்கும் தொடர்ந்தது...

நோயெனப் படுத்தால்
நலமறிய வருவோர்க்கு
தேநீர் பகிர்ந்து தாளாது.



விருந்தாம்,
அதை யாருக்கு வைப்பது?
வருவோரும் தன் வீடெனப் பகிர வரும் போது...

நீயா? நானா? எனும் போட்டி
மருந்துக்கும் இல்லை
சகோதரப் பாசம் விண்ணையும் முட்டும்
நாகரிகம் அவ்வளவாக இல்லை
ஆனாலும்,
அன்பில் நாகரிகமிருந்தது...

விழாக்கள் கோலாகலமானது
வெளி உறவுகளும் சேர்ந்து விருந்துண்ணும்
அந்த நாட்களும் கனவுகளாகின.

எது கொண்டாட்டம்...?

-வளர்கவி
வாழையூர் அபி.

விலைவாசி ஏறிப்போன காலத்தில்
வேதனையாய்ப் போய்ச்சு கொண்டாட்டம்
எம்மவர்களுக்கு...!

ஒரு நாள் கூலியைக் கொண்டு
ஒரு நாள் கொண்டாட்டத்திற்கு
என்ன தான் செய்வது...?

இரவும் பகலும் ஒன்றாகி
பசியும் பட்டினியும் பழகிப்போன ஏழைக்கு
எது கொண்டாட்டம்...?

நாங்கள் ஐவரெனினும்,
ஐந்தாம் கடைக்குட்டிக்கு மாத்திரம்
புதுச்சட்டை வாங்கும்
அப்பனின் மனமும் வெளுக்கவில்லை...




காணி விற்றும் கடன் வாங்கியும்
கொண்டாடுவோரில்
நான் எந்த ரகமெனக் கூறத் தெரியவில்லை?

எம் போன்றோருக்கு எது கொண்டாட்டம்...?
எல்லாமே திண்டாட்டம்தான்

ஆட்சி நிலையில் எப்போது மாற்றமோ,
அன்று எங்கள் வாழ்வில்
எது கொண்டாட்டம்? என்ற வினா எழாது...!

பாதக்கொலுசு

-பிள்ளைக்கவி பிரசாந்
கிண்ணையூர்



பாதச் சுவடுகளுக்கு...
பவளமாய் மிளிரும்
பனித்துளிகளாய்
இணைந்துள்ள முத்துக்களும்
என்னையும் சற்று
கவிஞனாய்ச் சிந்திக்க வைக்கின்றன...

பாவாடை தாவணியில்
பாலாடையாய் உறைந்திருக்கும் வெண்ணிலவின்
கொலுசு பூட்டிய பாதங்களில்
அழகும் இசையும்
இயையக் கலந்து
பூவுலகில் நின்றென்னைப் பிரித்தெடுக்கும்
புதுமை கற்றுள்ளதும் அதன் தனிச்சிறப்பு...

அணிகலன்கள் எதற்கென
வியக்க வைக்கும்
அவளின் பாத அழகிற்கு
அளவு மீறியதாகவே
அழகு கூட்டிடும் கொலுசு
காதல் அலைகளை என்றும்
என் சிந்தைக்குள்ளும்
இசைத்தபடியே நிற்கின்றது...

இதுவொரு போதை

-தமிழரராள் அனுஷ்திக்கா



லேசான புழுதியுடன்
தேகம் சிலிர்க்கும்
அந்த வாசனை!...
அலுமாரி அடுக்குகளில்
பூத்திட்ட மலர்கள் அல்லவா!
அனைத்தையும் அள்ளவா?

இந்த யோசனை தான்
எதைப் பறிப்பது?
எதைப் படிப்பது ?
எதை நுகர்வது?
எதைத் தின்பது?

சிலநேரம் விலங்கியல்கூட
கற்றிட்டேன்
அசை போடும் மாட்டின்
அவதானிப்புகளை
ஆடை கழன்று கிடக்கும்
சிலதுகள் சொல்லும்

சிலருக்கு
தூக்க மாத்திரைக்கு
எதிரான விளம்பரமாகும்
சிலருக்கு
தூக்கம் கலைக்கும்
தாரக மந்திரமாகும்

முகப்பைப் பார்த்து
வலது கையால்– அதன்
முகத்தைத் துடைத்து
பொருளடக்கம் கடந்து
பயணிக்கத் தொடங்குகையில்
ஒரு விதமாய் உலகம்

கண்களைத் திறந்தே
சொர்க்கத்தைக் காண முடியும்
அங்கிருப்போருடன் பேச முடியும்
“எப்படிச் சாதித்தீர்கள்?”
கேட்டுப்பாருங்கள்
உங்களிடம் பேசுவார்கள்
விடாதீர்கள்
கைகுலுக்கிக்கொள்ளுங்கள்
அப்படியே கற்றும்கொள்ளுங்கள்

ஒவ்வொரு பக்கங்களாய்
நகரும் போதும்
ஒருவித எதிர்பார்ப்பு
ஊறுரும்

முகம் புதைந்து கிடக்கும் நேரங்கள்
தலையணையாக்கிய இரவுகள்
ஒருவித போதைதான்

“போதைவஸ்தைத் தடுக்க
முடியவில்லையாம்”
தலைப்புச் செய்தியைப் படித்தேன்
அவர்களுக்கு புத்தகங்களைக்
கொடுங்கள்
தலைமுறைக்கும் செய்தியாவார்கள்


அத்தனையும் நான் படிக்க வேண்டும்
மரணமே சற்றே தாமதி!
போதை இன்னும் போதவில்லை...

விடைபெறுதல்

-ஓ.சா
களுவன்கேணி, மட்டக்களப்பு.

மீள் இணைப்புகளாக
அழைப்புகள்
தீர்ந்து போகவிருக்கும்
வார்த்தைப் பரிமாற்றங்களை
கணத்திற்கு கணம்
தாமதித்து
தரித்து நிறுத்துகின்றன.

நிறைவுப் புள்ளியில்
உறைய ஆரம்பிக்கும்
உணர்வுப் பேச்சொலிகளை
அதிர்ந்து கொண்டிருக்கும்
இரு செவிப்பறைகள்
வெப்பமேற்றி
திரவநிலையில் நிலைத்து நிற்கச்
செய்துவிட்டன.




வழக்கம் போன்றதொரு
உன்னத விடைபெறுதலை
மறுதலித்த மனங்கள்
ஒருமுறை
மீள் பரிசோதனையோடு
ஆராய்கின்றன
நாவிழந்த
நரம்பில்லா வார்த்தைகளை.

‘போய் வருகிறேன்’ என்றவுடனே
பெருக்கெடுத்து
தாகத்தை அதீதப்படுத்திவிடுகிறது
காத்திருப்பின் நீட்சி.

என்னிடம் நீ

-கவித்தோழி சிவநந்தினி
கண்ணகிபுரம், வாழைச்சேனை.



உன்னிடம் எனக்கான
கருவறைத் தொட்டிலையோ
வேறந்த தேவையையோ
தேடவில்லை!

என்னிடம் உனக்கான
அழகிய ஊஞ்சல்
ஒன்று உள்ளது!

எப்பொழுதும் அதில் நீ
மழலையாகக் குதூகலிப்பதைக்
காணும் பேராசை மட்டுமே
தொடர்கதை ஆகிறது!

விடைபெற வேண்டும்
புத்திக்கு விஞ்சி
மனமோ- விடை பெறுதலுக்கு
தடை விதிக்கிறது!

மலையுயர் மரியாதையும்
கடலளவு நேசிப்பும்
நடைபோட்டு விளையாடி
வினாத்தொடுக்க

என்னிடமிருந்து எப்போதும்
தொலைவில் நிற்கும்
எதிர்பார்ப்பு – இன்று தோள் தட்டி
கிண்டல் செய்கிறது!

ஆச்சரியங்கள் பல
உன்னில் கொட்டியுள்ளன!
சர்ச்சைகள் கூட
உன்னால் எழுகின்றன!

குழப்பமான சிந்தனைக்கும்
தீர்வுகள் கிடைக்கின்றன!
இதில் எங்கனம் துறப்பேன்
உன்னை!

இவள் காதலின்
ஒட்டுமொத்த வியப்பும்
உன்னில் தங்கியுள்ள
தன்மையை அறிவாயா!

தொட்டெடுத்து புரட்டிப் பார்க்கும்
ஒவ்வொரு பக்கத்திலும் புத்தம்புது
அனுபவத்தை தரும்- நான்
வாசிக்கும் நல் அழகிய புத்தகமே!

தினசரி என் கைஊஞ்சலில்
மழலையாக தவழ்ந்திடு!
ஏனெனில் குழந்தைகள்
சொல்லித் தரும் பாடத்தை
இப்பிரபஞ்சத்தில்
எவ் ஆசானாலும்
கற்றுத்தர முடியாது!!

...ர்கி...

-பொ. சாய் டிலக்ஷி
சுங்கான்கேணி.


வாழை மடலின் ஓரம்
கசியும் மழைத் தூறல்!
ஈரம் தன்னை உணர்ந்து
ஒடுங்கி நிற்க!

ஈர மணலின் மேலே
தேங்கி நிற்கும் நீரில்!
விட்டு விட்டுப் பெய்யும்
தூறலின் கண்ணில்!

நீர் குமிழ்கள்
பிறந்து
இறந்து
மகிழ!

மனிதனோ ஒடுங்கிக்
குளிர்ந்து கிடக்க!
குளிர் வாடை ஜன்னல்
தன்னை நோக்கி!

இளம் சூட்டை
இதயமும் வேண்டி
நிற்க!



கையும் வாயும் நாடுதே
உதடும்
தேடுதே!
அந்த ஒரு
CUP TEA யை!

மௌனம்

-தமிழ்மகள் சதுர்த்தி
வாழைச்சேனை.



ஒரு மொழி...
ஒரு அடையாளம்...
தணிக்க முடியாத தாகம்...
வெளிப்படுத்த முடியாத கோபம்...
விரட்டும் பல கேள்விகளுக்கான விடை...
பேசாத வார்த்தைகளைப் புரிய வைக்கும்
முயற்சிக்கும் உணர்ச்சிக்குமான தேடல்...
மௌனம்.



-தமிழ்மொழி வாழ்த்து-

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழிய வே!

வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழிய வே!

ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீசி
இசைகொண்டு வாழிய வே!

எங்கள் தமிழ்மொழி! எங்கள் தமிழ்மொழி!
என்றென்றும் வாழிய வே!

சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையக மே!

தொல்லை வினை தரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ்நா டே!

வாழ்க தமிழ்மொழி! வாழ்க தமிழ்மொழி!
வாழ்க தமிழ்மொழி யே!

~சுப்பிரமணிய பாரதியார்.



கவிதை
ஆழ்மனதின்
பிரவாகம்.

—காரிருளன்.

ISSN 3021-6680 Kavi Mulari Magazine

9773021668009

விபுலானந்தர் கலை இலக்கிய மன்றம்
பேத்தாழை